# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

## HCS 3223 Women in Hindu Society

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. "திருமண பந்தத்தை தெய்வீகச் சடங்காயும் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய வழிமுறையாயும் இந்துச் சட்டமூலங்கள் கருதின" இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்துப் பெண்களின் 'மனைவி' எனும் அந்தஸ்தினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

    (அ) திருமணமும் ஸ்திரிதனமும் (07 புள்ளிகள்)
    (ஆ) புறக்கணிப்பும் தள்ளிவைத்தலும் (07 புள்ளிகள்)

02. வேதங்களும் புராண இதிகாசங்களும் பிரதிபலிக்கின்ற சமூக வாழ்வியல் நெறிமுறைகள் இந்துப் பெண்களுக்கு சிறப்பிடத்தினை வழங்கியிருந்தன எனும் கருத்தினடிப்படையில் மேல்வரும் விடயங்களை பரிசீலனை செய்க.

    (அ) பெண் கல்வி (07 புள்ளிகள்)
    (ஆ) பெண் குழந்தைப் பிறப்பும் சமூக அந்தஸ்தும் (07 புள்ளிகள்)

03. சோழ்கால சமுதாயத்தில் பெண்கள் பெற்றிருந்த செல்வாக்கினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.

    (அ) அரசகுலப் பெண்கள் (07 புள்ளிகள்)
    (ஆ) சாதாரண குடும்பப் பெண்கள் (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. 'இந்து சமூகத்தில் விதவைகளின் நிலைப்பாடு பற்றிய கருத்தியல்கள் விமர்சனத்திற்குரியதாகவே அமைந்திருந்தது' இதனை விதவை மறுமணம், சதி வழக்காறு முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக.
    (24 புள்ளிகள்)

05. சகோதரி நிவேதிதை இந்துப் பெண்களுக்கும் இந்து சமுதாயத்திற்கும் ஆற்றிய பங்களிப்பினை ஆராய்க.
    (24 புள்ளிகள்)

06. "இந்து சட்டமூலங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சொத்துரிமை தொடர்பான விதிமுறைகள் பிற சமுதாயங்களைவிட முன்னேற்றகரமானது" எனும் கருத்தினை தகுந்த ஆதாரங்களுடன் பரிசீலனை செய்க.
    (24 புள்ளிகள்)

07. தேவரடியார் சமூக மறுமலர்ச்சியில், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியாரின் பங்களிப்பினை ஆராய்க.
    (24 புள்ளிகள்)

*****